# வட இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட ஆற்றுவடிநிலப் பிரதேசத்திலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலைப் படமாக்கலும், மதிப்பிடலும்: புவியியல் தகவல் ஒழுங்கு முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

சுபாஜினி உதயராசா
கருணாகரன் சுதாகர்

**ஆய்வுச் சுருக்கம்:**

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். அதாவது, வாழ்வாதாரமானது ஒரு தனிமனித நடவடிக்கையை மட்டும் குறிப்பிடுவதாக அமையாது. அது, குடும்பங்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு உருவாக்கிக் கொள்ளுகின்ற சிக்கலானதும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றதும், பன்முகப்பட்டதும் ஆகிய இயக்கமுறைத் தந்திரோபாயங்களை உள்ளடக்கியுள்ளது. நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது, தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, பௌதிக, சமூக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து வகையான வாழ்வாதாரச் சொத்துக்களில் தங்கியுள்ளது. வட இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட ஆற்று வடிநிலங்களில் உள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலைப் புவியியற் தகவல் ஒழுங்கு முறைமையைப் பயன்படுத்திப் படமாக்கலும், மதிப்பிடுதலுமே இவ் ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை Arc GIS தொழிநுட்பத்தைப் பயன்படுத்திப் பகுத்தாராய்வதனூடாக, இங்குள்ள நூற்றுநான்கு கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டு, படமாக்கப்பட்டு அவற்றின் இடம்சார்ந்த பாங்குகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முடிவாக, குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பல் மட்டங்கள் ஒரேமாதிரியாகக் காணப்படவில்லை என்பதும், கிராமசேவகர் பிரிவு ரீதியாகக் காணப்படுகின்ற வாழ்வாதாரச் சொத்துக்களின் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்வதுடன், அவற்றின் பரம்பலைச் சமப்படுத்துவதன் மூலம் வறுமையினைக் குறைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முடியும் என்பதும், இதனால் ஆய்வுப்பிரதேசத்தில் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை எட்ட முடியும் என்பதும் அறியவருகின்றன. எனவே, வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலைச் சரியாக அறிவதன் மூலம் ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியைச் சரியாக மேற் கொள்ளலாம் என்பதும் துணியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** ஆற்று வடிநிலம், வாழ்வாதாரச் சொத்துக்கள், இடம்சார் பரம்பல், புவியியல் தகவல் ஒழுங்கு, வாழ்வாதாரம், படமாக்கல்.

## 1. அறிமுகம்

இலங்கையின் வடபகுதியானது இயற்கையான, வளமான ஆற்று வடி நிலங்களை அதிகளவில் கொண்டுள்ளது. இவை பருவகால ஆறுகளின் வடி நிலங்களாகக் காணப்பட்டாலும், மக்களின் வாழ்வாதாரத்தில் உயிர்நாடியாக விளங்குகின்றன. ஆற்று வடிநிலங்களை அடுத்துக் காணப்படும் நிலப்பயன்பாடுகளில் திட்டமிடப்படாத செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இலங்கையின், குறிப்பாக வடபகுதியின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விவசாயமும், மீன்பிடியும் காணப்பட்டாலும், அங்குள்ள வாழ்வாதார நடவடிக்கைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன (புள்ளி விபரக் கைநூல்கள் 2012 - 2018).

வடபகுதி மக்களின் வாழ்வாதாரமானது கடந்த முப்பது வருடங்களாக (1980-2010) நிகழ்ந்த யுத்தத்தினாலும், வரட்சி, வெள்ளப் பெருக்கு, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் இப்பிரதேச மக்களின் உடைமைகள், சொத்துக்கள் ஏராளம் அழிவடைந்துவிட்டன. விவசாயத்திற்கு ஆதாரமான நீரினை வழங்கும் ஆறுகளும், அவற்றின் வடி நிலங்களும் சிதைவடைந்து காணப்படுகின்றன. வடபகுதியில் நிகழ்ந்த போரினால் இயற்கை அமைப்பில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தவகையில், வடபகுதி மக்கள் காட்டுப் பொருளாதார நன்மைகள் பலவற்றையும் இழந்துள்ளார்கள். குறிப்பாக, விறகு சேகரித்தலுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், காடுகளில் கிடைக்கும் பல்வேறு வகையான பழங்கள், மூலிகைகள் ஆகியவற்றைப் பெறமுடியாத நிலை, விலங்குகளுக்குத் தேவையான உணவுகளைப் பெற முடியாத நிலை, விவசாய உபகரணங்கள் செய்வதற்குத் தேவையான சிறியரக மரத்தடிகளைப் பெறமுடியாத நிலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இயற்கை வளங்கள் கூட இப் பகுதிகளில் சூறையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். வனப் பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகளால் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வடபகுதியை மீளக்கட்டியெழுப்புவதற்கு அரசியல் மற்றும் வேறு சில தேவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தினுடைய அபிவிருத்தியை மீளக்கட்டி எழுப்புவதற்கு இப்பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார்ந்த அபிவிருத்தி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாக இருக்கின்றது. இந்த ஆய்வானது தனியே நிர்வாக மற்றும் அரசியல் எல்லைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அங்கு காணப்படும் இயற்கை வளங்களின் கிடைப்பனவின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு இன்றியமையாதாகும். அந்தவகையில், வட இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட ஆற்று வடிநிலங்களில் உள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலைப் புவியியல் தகவல் ஒழுங்கு முறைமையை பயன்படுத்திப்படமாக்கலும், மதிப்பிடுதலுமே இந்த ஆய்வின் நோக்கம் ஆகும்.

இந்த ஆய்விற்காகப் பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் கருத்திற்

கொள்ளப்பட்டன. அவற்றுள் மிகப் பயனுடையதான ஒரு சில கட்டுரைகளின் சாராம்சங்கள் பின்வருமாறு.

ஆற்று வடிநிலங்களையும், வாழ்வாதாரச் சொத்துக்களுக்கு இடையிலான தொடர்புக ளையும், ஐந்து விதமான மூலதனச் சொத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாறிகளையும், அம் மாறிகளை பல்வேறு வகையான பிரிவுகளிலும் உள்ளடக்கி உள்ளதையும் பல்வேறு ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளார்கள் (Erentein Hellin and Chahdna - (2010), Kristjanson et al.,(2005), Eillis and Bahigwa (2003)). ஓர் ஆய்வுக் கட்டுரையில் வாழ்வாதாரச் சொத்துக்களில் ஒன்றான இயற்கை மூலதனச் சொத்துக்களின் பரம்பல்களை புவியியல் தகவல் ஒழுங்கு முறையைப் பயன்படுத்திப் படமாக்கல் மேற் கொள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் வாழ்வாதாரச் சொத்துக்களைப் படமாக்கும் முறையியலை அறிய முடிகின்றது (Raymond, Bryan, Macdonald,Cast, Strathearm, Grand girard Kalivas - 2009). பல்வேறு ஆய்வுகளில் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலைப் படமாக்கி, மதிப்பிடுவதற்கு செய்மதித் தரவுகளையும், Arc GIS நுட்ப முறைகளை யும் பயன்படுத்தி உள்ளார்கள் (Erentein Hellin and Chahdna – 2010, Nicholas minot – 2000, Bisogno and Chong 2002, Elvidge et al.,2009). ஐந்து மூலதனச் சொத்துக்களையும் பிரதி பலிக்கும் பல்வேறு வகையான மாறிகளை அடையாளம் செய்து, படமாக்கி உள்ளதோடு, அளவுசார், இடம்சார் அளவுப் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தியதன் ஊடாக, வாழ்வாதாரச் சொத்துக்களுக்கு இடையிலான தொடர்பு களை ஆராய்ந்துள்ளார்கள் (Kristjanson et al.,2005). வாழ்வாதாரச் சொத்துக்களுக்கும், வறுமைக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆய்வில் இயற்கை, பௌதிக, மனித, சமூக மற்றும் நிதி மூலதனம் போன்ற ஐந்து வகையான வாழ்வாதார மூலதனச் சொத்துக் களும் புவியியல் தகவல் ஒழுங்குமுறை மூலம் படமாக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட் டுள்ளன. அதாவது இயற்கை, சமூக, பௌதிக, மனித மற்றும் நிதி போன்ற வாழ்வாதாரச் சொத்துக்களினுடைய பயன் பாடு நிலைத்திருக்கக்கூடிய வாழ்வாதார அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந் துள்ளது என்பதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது (Kristjanson, Radeny, Baltenweek, Ogutu, Notenbaert – 2005). இவ்வாறாக, உலகின் பல்வேறு பிரதேசங்க ளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆற்று வடி நிலங்கள் மற்றும் ஆற்று வடிநிலப் பிரதேசங்க ளிலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பல் மற்றும் அவற்றின் மதிப்பீடுகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்விற்குப் பல்வேறு வழிகளில் பயனுடையதாக அமைந் துள்ளன. குறிப்பாக, இக் கட்டுரைகளில் கூறப்பட்ட தரவு சேகரிப்பு நுட்பமுறைகள், வாழ்வாதாரச் சொத்துக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மாறிகளைத் தெரிவு செய்தல், பகுப்பாய்வு நுட்ப முறைகள் போன்றன மிகவும் பயனுடையதாக அமைந்திருந்தன.


இலங்கையில் ஆற்று வடிநிலங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதாரச் சொத்துக்களை அளவீடு செய்தலோ, படமாக்கலோ, மதிப்பிடலோ இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற யுத்தத்தி னால் ஆய்வுப் பிரதேசமானது மிகவும்

பாதிக்கப்பட்டு, மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்பிரதேச மக்களின் வறுமையைக் குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு இங்குள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலை அறிவதோடு அதனைப் படமாக்கி மதிப்பீடு தல் அவசியமாக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பிரதேசம் :

இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஐந்து நிர்வாக மாவட்டங்களில் முல்லைத் தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஆய்வுப் பிரதேசமானது பரம்பியுள்ளது. பொதுவாக ஆய்வுப் பிரதேசங்கள் நிர்வாக எல்லைகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. ஆனால், இந்த ஆய்வுப் பிரதேசமானது இயற்கையான வடிநில எல்லையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது கனகராயன் ஆறு, பேராறு, பாலி ஆறு ஆகிய மூன்று வடிநிலங்களையும் உள்ள டக்கிய பிரதேசமே ஆய்வுப் பிரதேசமாகும். இதன் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாணக் கடனீரேரியும், வடமேற்கேயும், கிழக்கேயும் இந்து சமுத்திரமும், தெற்கே வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவும், மேற்கே பூநகரி, மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுகளும் காணப்படுகின்றன. அகல நெடுங்கோட்டு அடிப்படையில் வட அகலாங்கு 8° 52' 54" தொடக்கம் 9° 31' 18" வரைக்கும் கிழக்கு நெடுங்கோடு 80° 20' 41" தொடக்கம் 80° 44' 50" இடையிலும் ஆய்வுப் பிரதேசமானது அமைந்துள்ளது. இவ் ஆய்வுப் பிரதேசத்தினுள் வவுனியா, வவுனியா வடக்கு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைத்துறைப்பற்று, துணுக்காய், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய ஒன்பது பிரதேச செயலர் பிரிவுகள் முழுமையாகவும் பகுதியாகவும் உள்ளடங்கியுள்ளன. அதேபோல் நூற்று நான்கு கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாகவும், பகுதியளவிலும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ளடங்கி உள்ளன. இந்தப் பிரதேசத்தினுடைய மொத்தப் பரப்பு 136,511.62 ஹெக்ரேயர்கள் (1365.11 சதுர கிலோ மீற்றர்கள்) ஆகும். இது, இலங்கையின் மொத்தப் பரப்பில் இரண்டு சதவீதமாகும். ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடத்தை உரு 1 இல் அவதானிக்கலாம்.

**ஆய்வுப் பிரதேசம்**




உரு 1: ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடம்
மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது.

| விடயங்கள் | கனகராயன் ஆறு | பேராறு | பாலியாறு |
|---|---|---|---|
| நீரேந்து பரப்பு (சதுர Km) | 906 | 378 | 85 |
| கிராம சேவகர் பிரிவுகள் | 73 | 26 | 05 |
| பெரிய, நடுத்தர குளங்கள் | 05 | 01 | 01 |
| சிறிய குளங்கள் | 64 | 33 | 06 |
| பிரதான பொருளாதார நடவடிக்கைகள் | விவசாயம், கால்நடை வளர்ப்பு | விவசாயம், கால்நடை வளர்ப்பு | விவசாயம், கால்நடை வளர்ப்பு |
| குடித்தொகை அடர்த்தி (சதுர Km) | 87 | 35 | 35 |

அட்டவணை 01: ஆய்வுப் பிரதேச ஆற்றுவடிநிலங்கள் தொடர்பான விடயங்கள்
மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது.

ஆய்வுப் பிரதேசத்தில் மேற்பரப்பு நீர், தரைக்கீழ் நீர் என இரண்டு வகையான நீர் வளங்கள் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேச ஆற்று வடிநிலங்களின் ஒரேயொரு நீர் மூலம் நேரடி மழை வீழ்ச்சி ஆகும். இவ்வடிநிலப் பரப்புகளினுள்ளும் மனிதனால் தனது தேவைக்காகவும், பிற தேவைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட பல சிறிய, பெரிய குளங்களில் மழை காலங்களில் தேக்கப்படும் நீர் பல்வேறு கிளையாறுகளினால் பிரதான ஆற்றினுள் செலுத்தப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் 35,803 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன், சனத்தொகையானது 117,806 ஆகக் காணப்படுகின்றது (புள்ளி விபரக் கைந்நூல் - 2017). இதில் 56,852 ஆண்களும் 60,954 பெண்களும் உள்ளனர். இவர்களில் 95 சதவீதமான குடும்பங்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றார்கள் (கள ஆய்வு - 2016). கடந்த முப்பது வருடகால யுத்தத்தினால் இப்பிரதேசமும், இப்பிரதேச மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (கள ஆய்வு - 2016).

## 2. முறையியல்

### 2.1. தரவுகளும் தரவுசேகரிப்பு முறைகளும்


இந்த ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், மையக்குழு விவாதங்கள், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல்கள் போன்ற வழிமுறைகளின் ஊடாக பெறப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாயக் குழுக்கள், கமநலசேவை உத்தியோகத்தர்கள், காணிக் கச்சேரி உத்தியோகத்தர்கள், நிலப்பயன்பாட்டு திட்டமிடலாளர்கள், ஆய்வுப் பிரதேச திட்டமிடலாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றவர்களுடன் மையக்குழு விவாதங்களை மேற்கொண்டு அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரச் சொத்துக்கள், வறுமை பற்றிய தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. நூற்றுநான்கு கிராம சேவகர்களுக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு மக்களின் ஐந்து வகையான வாழ்வாதாரச் சொத்துக்கள் பற்றிய தரவுகளும் பெறப்பட்டுள்ளன. அத்துடன், வாழ்வாதாரச் சொத்துக்கள் தொடர்பான புள்ளி விபரத்தரவுகள் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட வறுமை தொடர்பான தரவுகள், ஆய்வுப் பிரதேச நிர்வாக எல்லைப் படம் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. அத்துடன் 2019, 2020 ஆம் ஆண்டுகளில் ஆய்வுப் பிரதேசத்தில் தரவுகள் மேலும் சேகரிக்கப்பட்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2. தரவுப் பகுப்பாய்வு

இடம்சார் தரவுகள் ஒவ்வொன்றும் வாழ்வாதாரச் சொத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிப்பட்ட கட்டளைக் கற்களாகும். இவை மனித மூலதனம், பௌதிக மூலதனம், நிதி மூலதனம், சமூக மூலதனம், இயற்கை மூலதனம் ஆகிய ஐந்து மூலதனங்களாகப் பாகுபடுத்தப்பட்டு வாழ்வாதாரச் சொத்துக்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. வாழ்வாதாரச் சொத்துக்களில், அதாவது ஐந்து வகையான மூலதனங்களினுள்ளும் உள்ளடங்குகின்ற ஆய்வுப் பிரதேசத்திற்கு அவசியமானதாக உள்ளதும், அப்பிரதேசத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளதென ஆய்வின் மூலம் அறியப்பட்டதுமான கட்டளைக் கற்கள் அல்லது குறிகாட்டிகள் வினாக்கொத்தின் மூலம் அடையாளப் படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாழ்வாதாரச் சொத்துக்களின் தரவுகள் GIS – Arc Map10.1 ஊடாக கணினியில் உள்ளீடு செய்யப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.


இவ்வாழ்வாதாரச் சொத்துக்களின் தரவுப்பகுப்பாய்வின் செயல்முறைகளை பாய்ச்சல் கோட்டு வரைபடம் (Flow chart) (உரு 2) விபரிக்கின்றது.




உரு. 02: இடம்சார் பல்நியமப் பகுப்பாய்வு (Spatial Multi Criteria Analysis) (தனித்தனி மாறிகளுக்கு)

வாழ்வாதாரச் சொத்துக்களுக்கான தனிப்பட்ட கட்டளைக் கற்கள் ஒவ்வொன் றுக்கும் நியமமாக்கல் பெறுமதி (Standardize value) கொடுக்கப்பட்டு, பின் அவற்றிற்கு ஒவ்வொரு கட்டமாக நிறை கொடுத்தல் (Weight Allocation) மேற்கொள்ளப் பட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு கட்டளைக் கற்களின் முக்கியத்துவத்தின் அடிப்படை யில் நிறை வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒவ்வொரு கட்டளைக்கல்லிற்கும் சோடி ஒப்பீட்டுப் பகுப்பாய்வு (Pair wise Comparison) அடிப்படையில் நிறை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயன்முறையின் அடிப்படை யில் இவ் ஐந்து வாழ்வாதாரச் சொத்துக்க ளுக்களுக்கும் தனித்தனிச் சொத்துக் களாகப் படங்கள் பெறப்பட்டுள்ளன.

அடுத்து, தனித்தனி வாழ்வாதாரச் சொத்துக்களுக்களுக்குமான ஐந்து வெளியீட்டுப் படங்களையும் ஒன்றாகச் சேர்த்து நியம மாக்கல் (Standardize) கொடுக்கப்பட்டு, அதன் பின்னர் நிறை (Weight) கொடுக்கப் பட்டு, வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப் படையாக் கொண்ட இறுதிப் படமானது (வாழ்வாதாரச் சொத்து படம் -Livelihood Map) பெறப்பட்டுள்ளது. இதனைப் பாய்ச் சல் கோட்டுப்படம் (உரு 3) விபரிக்கின்றது.





உரு 3 இடம்சார் பல்நியமப் பகுப்பாய்வு (தனித்தனி மூலதனங்களுக்கு)

## 3. ஆய்வின் முடிவுகள்

### 3.1.வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார்பாங்கு

ஆய்வுப் பிரதேசத்தின் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கும், பிரதேச மக்களின் சிறந்த வாழ்விற்கும் வாழ்வாதார மூலதனங்களின் மதிப்பீடு அவசியமாக உள்ளது. பிரதேச சமூக அபிவிருத்திக்கு மனித வளம் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சமூகமானது தனி மனிதனினால் உருவாக்கப் பட்டது என்பதனால் மனிதவள அபிவிருத்தி, சமூக அபிவிருத்திக்கு அடிப்படையாக உள்ளது.

இத்தகைய மனித மூலதனத்தினை அளவீடு செய்வதற்காக விவசாயக் குடும் பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தங்கிவாழ்வோர், மாணவர்கள், பட்டதாரிகள், கூலி வேலை செய்வோர் ஆகிய ஆறு கட்டளைக்கறகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவற்றின் பிரதேச ரீதியான இடம்சார் பரம் பல்கள் படமாக்கப்பட்டுள்ளன. மனித மூலதன மாறிகளின் இடம்சார் பரம்பற் படங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித மூலதனம் தொடர்பான பிரதேசரீதியான இடம்சார் பரம்பற் பாங்கினை உரு 4 இல் அவதானிக்க முடியும்.




உரு 4 மனித மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பாங்கு


ஆய்வுப் பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு மேற்கு, மாங்குளம், கோம்பாவில், உடையார் கட்டு தெற்கு, அம்பாள்நகர், உருத்திரபுரம் வடக்கு, இராமநாதபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மனித மூலதனம் உயர்வான நிலையில் காணப்படுவதை ஆய்வின் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. அதிகளவான குடும்பங்கள் (கள ஆய்வு 2016) விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

அத்துடன், இந்த அனைத்து விவசாயக் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையான பயிர்ச்செய்கையிலாவது ஈடுபட்டுள்ள தாலும், பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் மொத்தக் குடித்தொகையில் இரண்டு வீதமாக உள்ளமையும், தங்கி வாழ்வோர் ஐந்து வீதமாக உள்ளமையும், அதிகளவான மாணவர்கள் (94%) கல்வி கற்கப் பாடசாலைகளுக்குச் செல்வதாலும், கூலிவேலை செய்வோர் ஆறு வீதமாக (கள ஆய்வு 2015) உள்ளதாலும் மனித மூலதனம் உயர்வான நிலையில் காணப்படுகின்றது. அத்துடன், ஆய்வுப் பிரதேசத்தில் இந்துபுரம், திருமுருகண்டி, பாரதிபுரம், மாயவனூர், ஆனந்தபுரம், உதயநகர் கிழக்கு, தேவிபுரம், புதுக்குடியிருப்பு கிழக்கு, கேப்பாப்பிலவு, கனகராயன் குளம் தெற்கு, ஒட்டுசுட்டான், தட்டாயமலை, முத்து விநாயாபுரம், முள்ளிய வளை மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மனித மூலதனமானது மத்திம நிலையில் காணப்படுகின்றது. இப் பிரதேசங்களில் 54 வீதமா னவர்களே (கள ஆய்வு - 2015) விவசாயத்தில் ஈடுபடுவதோடு ஏனையவர்களுக்கு நிலம் இருந்தும் நீர்ப் பாசனப் பிரச்சினையால் பயிர்ச்செய்கை யில் ஈடுபட முடியாதவர்களாக உள்ளனர். அத்து டன், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் 12 வீதமாகவும், தங்கி வாழ்வோர் எட்டு வீதமாக வும் (கள ஆய்வு- 2015) காணப்படுகின்ற மையும் மனித மூலதனம் மத்திம நிலையில் இருப்பதற்குக் காரணங்களாக கண்டறியப் பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் ஆனையிறவு, ஊரியான், தட்டுவன்கொட்டி, உமையாள் புரம், பெரியகுளம், கணேசபுரம், பேராறு, ஆனந்த புளியங்குளம், பன்றிக்கெய்தகுளம், புளியங் குளம் தெற்கு, ஊஞ்சால்க் கட்டி, வெடிவைத்த கல்லு, சேமமடு, மலிகை, மகிழங்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மனித மூலதனமா னது மிகக் குறைவான நிலையில் உள்ளதை ஆய்வின் முடிவுகள் வெளிக்காட்டி உள்ளன (உரு 4இனை அவதானிக்க). இப் பிரதேசங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் (36%) அதிகமாக இருப்பதும், விவசாயக் குடும்பங்கள் மிகக்குறைவாக (9%) இருக்கும் அதேவேளை, கூலி வேலையில் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை (67%) அதிகமாக இருப்பதும், மாற்றுத் திறனாளிகள் உள்ள குடும்பங்கள் அதிகமாக இருப்பதாலும், பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் அதிகமாகக் காணப்படுவதாலும் (கள ஆய்வு - 2015) மனித மூலதனமானது மிகக் குறைவான நிலையில் காணப்படுகின்றது. உதாரணமாக, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 905 குடும்பங்கள் (நேரடி அவதானம் 2016) பெண் தலைமைத் துவக் குடும்பங்களாக உள்ளனர். இவர்களில் அநேகமானோர் யுத்தத்தின் போது குடும்பத் தலைவர்களை இழந்தவர்களாகக் காணப் படுகின்றனர். இதனைவிட, பிரிந்து வாழும் குடும்பங்களும், குடும்பத் தலைவர்கள் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் சென்ற குடும்பங்களும் உள்ளமை கள ஆய்வின்போது அறிய முடிந்தது.

அத்துடன் இப்பிரதேசசெயலர் பிரிவில் மட்டும் 1,688 முதியவர்களும் (65 வயதிற்கு

மேல்), 311 மாற்றுத் திறனாளிகளும் உள்ளனர் (பிரதேச செயலக புள்ளிவிபர கைந்நூல்- 2016). அதேபோல், புதுக்குடியி ருப்புப் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலை களில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் அதிகமாக உள்ளமை கண்டறியப்பட்டுள் ளது. கணவனை இழந்த அல்லது கணவ னால் கைவிடப்பட்ட பெண்களின் குடும்பத் திலுள்ள பிள்ளைகள், மத்தியகிழக்கு நாடுக ளுக்கு வேலை வாய்ப்பிற்காகச் சென்ற பெண்களின் பிள்ளைகள் போன்றவர்களே அதிகமாகப் பாடசாலையில் இருந்து இடைவிலகியவர்களாக உள்ளனர். வறுமை காரணமாக நாளாந்தக் கூலி வேலை செய்வதும், அதற்காகச் சிலர் பிள்ளைகளை அழைத்துச் செல்வதும், சிலர் மூத்த பிள்ளையை வீட்டிலுள்ள ஏனையவர்களை கவனிப்பதற்காக விட்டு வேலைக்குச் செல்வ தும் இதற்கான முக்கிய காரணங்களாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறாக, ஆய்வுப் பிரதேசத்திலுள்ள நூற்று நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலும் மனித மூலதனம் கொண்டுள்ள இடம்சார் பரம்பல் பாங்கினை படமாக்கலின் மூலம் அறிய முடிந்துள்ளது.

அடுத்து, இயற்கை மூலதன கட்டளைக் கற்களின் இடம்சார் பரம்பற் பாங்கினை அவதானிக்கின்றபோது இயற்கையால் வழங்கப்படும் அனைத்து அம்சங்களும் உள்ளடங்கும். இவ்வளங்கள் வரையறைக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவ்வளங்கள் அருமையாகக் காணப்படுவ தால் இவற்றின் பயன்பாடு மிகவும் திட்ட மிடப்பட வேண்டியதாக உள்ளது. அந்த வகையில் இயற்கை மூலதனத்தை அளவீடு செய்வதற்காக நெற்செய்கைப் பரப்பு, மேட்டுநிலப் பயிர்ச்செய்கைப் பரப்பு, காடுகள், மேய்ச்சல் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், நீர்நிலைகள் ஆகிய ஆறு கட்டளைக் கற்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, பகுப்பாய்வின் மூலம் படமாக்கப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. அந்த வகையில், தெரிந்தெடுக்கப்பட்ட இயற்கை மூலதனக் கட்டளைக் கற்கள் தொடர்பாகக் கிடைத்த பெறுபேறுகளை குறிப்பாக, அவற்றின் பிரதேச ரீதியான பரம்பல்கள் படமாக்கப்பட்டுள்ளன. இயற்கை மூலதன மாறிகளின் இடம்சார் பரம்பற் படங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட இயற்கை மூலதனம் தொடர் பான பிரதேச ரீதியான இடம்சார் பரம்பல் பாங்கினை உரு 5இல் அவதானிக்க முடியும்.





உரு 5: இயற்கை மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பங்கு

ஆய்வுப் பிரதேசத்தில் கண்டாவளை, புளியம்பொக்கணை, மன்னகுளம், புளியங் குளம் வடக்கு, வெடிவைத்தகல்லு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இயற்கை மூலதனமானது உயர்வான நிலையில் உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. இப்பகுதிகளில் நெற்செய்கைப் பரப்புக்கள் அதிகளவாக உள்ளமை, பயன் படுத்தப்படாத நிலங்கள் குறைவாக உள்ளமை (4%), கண்டாவளை போன்ற பிரதேசங்களில் இரண்டு போகங்களில் நெற்செய்கைப் பரப்புக்களைப் பயன் படுத்துகின்ற நிலை (நேரடி அவதானம் - 2016), மேட்டுநிலப்பயிர்களுக்கு கிணறுகள் மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுதல் போன்ற காரணங்களால் இயற்கை மூலதனம் உயர்வான நிலையில் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் இயற்கை மூலதனம் உயர்வாகக் காணப்படும் பகுதிகளில், 54 வீதமான குடும்பங்கள் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளதை நேரடி ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது.

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் இயற்கை மூலதனம் மிகக்குறைவான நிலையில் உள்ளமை ஆய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது. இங்கு நெற்செய்கைப் பரப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமை, நீர்ப்பாசனப் பிரச்சினையால் (நீரின்மை) பயன்படுத்தப்படாத நிலங்கள் அதிகமாக உள்ளமை, இருக்கும் நெற்செய்கைப் பரப்புக்களை குறைவாகப் பயன்படுத்துகின்ற தன்மை, நீரின்மையால் மக்கள் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடாத நிலை, காடுகள் குறைவாக உள்ளமை, நீர்நிலைகள் பற்றாக்குறையாக உள்ளமை, கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்நிலங்கள் காணப்படாமை போன்ற காரணங்களாலேயே இயற்கை மூலதனம் மிகக் குறைவான நிலையில் இப்பிரதேசங்களில் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் பதினேழு கிராமசேவகர் பிரிவுகளில் இயற்கை மூலதனமானது மத்திமமான நிலையில் இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின்னர் இங்குள்ள பல குளங்கள் புனரமைக்கப்பட்டு நெற்செய்கைப் பரப்புக்க ளில் 80 வீதமானவை (மையக்குழு விவாதங்கள் - 2016) பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டமை, அத்துடன் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் மக்கள் அதிகளவில் ஆர்வங்காட்டுகின்ற நிலை, உடமைகள் யாவற்றையும் இழந்த நிலையில் மீள் குடியேறிய மக்கள் தமது வருமானத்தை எவ்வெவ்வழிகளில் பெறலாம் என முயற்சித்து இயலுமான வரை காணிகளைப் பயன் படுத்துகின்றமையால் பயிர் செய்யப்படாத பரப்புக்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இவை போன்ற காரணங்களால் ஆய்வுப் பிரதேசத்தில் இயற்கை மூலதன மானது மத்திம நிலையில் உள்ளமை நேரடி ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசமானது போரினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு தற்போது மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இங்கு நடைபெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத் திற்கும் நிதிவளம் இன்றியமையாததாக உள்ளது. குறிப்பாக, திட்டங்களை அமுல்படுத்துகின்றபோது பாரியளவு நிதி தேவைப்படுகின்றது. வாழ்வாதார மூலதனங்களைப் பேணுவதற்கு ஆதரமாக அமைவது நிதி மூலதனமாகும். இந்த வகையில் ஆய்வுப் பிரதேச நிதி மூலதனத்தை அளவிடும் கட்டளைக்கற்களாக பல்வேறு வகையான வருமான மட்டங்கள், நிதி நிறுவனங்கள் போன்றன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இக்கட்டளைக்கற்கள் யாவும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு படமாக்கப்பட்டுப் பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. நிதி மூலதன மாறிகளின் இடம்சார் பரம்பற் படங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி மூலதனம் தொடர்பான பிரதேசரீதியான இடம்சார் பரம்பற் பாங்கினை உரு 6 இல் அவதானிக்க முடியும்.





உரு 6 நிதி மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பாங்கு

ஆய்வுப் பிரதேசத்தில் அம்பாள்நகர், உதயநகர் கிழக்கு, ஆனந்தபுரம், மாயவனூர், மாவடியம்மன், இராமநாதபுரம், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, முள்ளியவளை மேற்கு, கோம்பாவில், உடையார்கட்டு தெற்கு, மாங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் நிதி மூலதனமானது மிக உயர்வான நிலையில் உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப் பிரதேங்களில் உள்ளவர்களில் அதிகமானோர் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிநேரத் தொழில்களை (விவசாயம், வர்த்தகம், தையல், பற்பொடி செய்தல், பன்னவேலை, மிக்சர் தயாரித்தல்) வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் மூலம் நிதியுதவிகளைப் பெறுபவர்களாகவும் உள்ளதால் இங்கு நிதி மூலதனம் மிக

உயர்வான நிலையில் உள்ளது. அதே வேளை, பதினெட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகளில் நிதி மூலதனமானது மிக குறைவான நிலையில் உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப் பிரதேசங் களில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் சொந்த நிலமற்றவர்களாகவும் (53.4%), கூலித் தொழிலாளர்களாகவும் (51.32%), சிறிய பரப்புக்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கை களை மேற்கொள்ளுபவர்களாகவும், அரச உதவிகள் குறைவாகக் கிடைக்கப் பெறுபவர்க ளாகவும் இருப்பதால் (நேரடி அவதானம் - 2016, வினாக்கொத்து - 2015, மையக் குழு விவாதங்கள் - 2016) வருமானத்தினை மிகக் குறைவாகவே பெறுகின்றனர். இவை இப்பிரதேச நிதி மூலதனம் மிகக் குறைவான நிலையில் இருப்பதற்கான காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத் தில் ஆறு கிராம சேவகர் பிரிவுகளில் நிதி மூலதனமானது மத்திமமான நிலையில் உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட் டுள்ளது. இவற்றைவிட உயர்வான நிலை, குறைவான நிலை என்ற இரண்டு பிரிவுகளி லும் ஆய்வுப் பிரதேச நிதி மூலதனத்தின் பரம்பற் பாங்கு உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.


ஆய்வுப் பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களை அளவிடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மூலதனங்களில் சமூக மூலதனமும் ஒன்றாகும். இந்தச் சமூக மூலதனத்தை அளவிடும் கட்டளைக் கற்களாக சமூகக் குழுக்கள், சமூக நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள், பாதுகாப்பு, சுகாதாரம், சமூக உறவுநிலை, ஆண் பெண் தலைமைத் துவம் போன்றன தெரிவுசெய்யப்பட்டு, இவை அனைத்தும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப் பட்டுப் பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. அந்த வகையில், தெரிந்தெடுக்கப்பட்ட சமூக மூலதன கட்டளைக்கற்கள் தொடர்பாகக் கிடைத்த பெறுபேறுகள் குறிப்பாக, அவற்றின் பிரதேசரீதியான இடம்சார் பரம்பல்கள் படமாக்கப்பட்டுள்ளன. சமூக மூலதன மாறிக ளின் இடம்சார் பரம்பற் படங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப் பட்ட சமூக மூலதனம் தொடர்பான பிரதேச ரீதியான இடம்சார் பரம்பற் பாங்கினை உரு 7 இல் அவதானிக்க முடியும்.




உரு 7: சமூக மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பாங்கு

ஆய்வுப் பிரதேச தரவுகளின் பகுப்பாய்வு களினதும், படமாக்கலினதும் முடிவுகளின் படி புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, கோம்பாவில், தேவிபுரம், முள்ளியவளை மேற்கு, அம்பாள் நகர், வட்டக்கச்சி, மாங்குளம் ஆகிய எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் சமூக மூலதனம் உயர்வான நிலையில் உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. இங்கு மாதர் சங்கங்களின் செயற்பாடுகள், சமுர்த்திக் குழுக்களின் சமூக ரீதியான செயற்பாடுகள், கிராம முன்னேற்றச் சங்கம், சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம், விவசாயக் குழுக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் அதிகளவாகக் காணப்படுவதும், அயலவர்களுடன் கொண்டுள்ள சமூக உறவு நிலை திருப்திகரமாக இருப்பதும், பாதுகாப்பு, சுகாதாரம் என்பன திருப்திகரமாக இருப்பதும் மதங்களின் வணக்கஸ்தலங்கள் பல இருப்பதுமே இப்பகுதிகளில் சமூக மூலதனம் உயர்வாக இருப்பதற்குக் காரணங்களாகக் கள ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டுள்ளது. அதேவேளை, முப்பத்து நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் சமூக மூலதனமானது குறைவான நிலையில் உள்ளமையும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் மக்களின் கூட்டுறவு மனப்பாங்குகள் குறைவாக உள்ளதுடன் சமூகக் குழுக்களின் செயற்பாடுகள் குறைவாக உள்ளதும், சுகாதார சேவைகளின் தரம், அளவு போன்றன மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளமையும் பிரதான காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்திலுள்ள அறுபத்து இரண்டு கிராம சேவகர் பிரிவுகளில் (59.62%) சமூக மூலதனமானது மத்திமமான நிலையில் உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் போரிற்குப் பின்னர் மீள்குடியேற்றம் நடைபெற்ற பகுதியாக இவை காணப்படுவதால் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகள், சமூகக் குழுக்களின் உருவாக்கம், அவற்றின் செயற்பாடுகள், சமூக உறவுநிலை, சுகாதாரம், பாதுகாப்பு போன்றன துரிதமாக தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன. அத்துடன், ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த வணக்கஸ்தலங்களின் புனரமைப்பு, வைத்தியசாலைகளின் புனரமைப்பு, மருத்துவ சேவைகளின் விரிவாக்கம், சுமூகமான சூழல் ஆகியன சமூக மூலதனம் மத்திம நிலையில் இருப்பதற்குக் காரணங்களாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேச பௌதிக மூலதனத்தை அளவிடுவதற்குப் பல்வேறு கட்டளைக் கற்கள் அல்லது குறிகாட்டிகள் பயன்படுத் தப்பட்டுள்ளன. பௌதிக மூலதனத்தை தோற்றுவிப்பதில் ஏனைய நான்கு மூலதனங்களினதும் செல்வாக்கு முக்கியம் பெற்றிருக்கின்றது. அந்தவகையில் பௌதிக மூலதனத்தை அளவிடும் கட்டளைக்கற்களாக நிரந்தரமான வீடுகள், தற்காலிகமான வீடுகள், மின்சாரம், சூரியகலப் பயன்பாடு, மலசலகூட வசதி, வாகனங்கள் (இரண்டு, நான்கு சில்லுகளுள்ளவை) அரச, அரசசார்பற்ற கட்டடங்கள், தொடர்பாடற் கருவிகள், பொழுது போக்கு மையங்கள் போன்றன தெரிவு செய்யப்பட்டு இவை அனைத்தும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு பிரதேசரீதியான இடம்சார் பரம்பல்கள் படமாக்கப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. பௌதிக மூலதன மாறிகளின் இடம்சார் பரம்பற் படங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட பௌதிக மூலதனம் தொடர்பான பிரதேச ரீதியான இடம்சார் பரம்பற் பாங்கினை உரு 8 இல் அவதானிக்க முடியும்.




உரு 8: பௌதிக மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பாங்கு

ஆய்வுப் பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு மேற்கு, கோம்பாவில் ஆகிய இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரமே பௌதிக மூலதனம் மிக உயர்வான நிலையில் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இங்குள்ளவர்களில் அதிகமானோர் நிரந்தரமான வீடுகளையும், அதனுடன் இணைந்த மலசலகூட வசதிகளையும் கொண்டுள்ளனர். அத்துடன், மின்சாரத்தினை பயன்படுத்தும் குடும்பங்கள் நூறு வீதமாகவும், மின்சாரம் இல்லாத சந்தர்ப்பங்களில் 93 வீதமான குடும்பங்கள் சூரியகலங்களைப் பயன்படுத்துபவர்களாகவும் உள்ளனர். மேலும் சொந்த வாகனங்களை 96 வீதமானவர்கள் பயன்படுத்துகின்றனர். தொடர்பாடல் கருவிகளின் பயன்பாடு இக்கிராமசேவகர் பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் உள்ளது. (கள ஆய்வு - 2015, 2016) இவை போன்ற காரணிகளால் இக்கிராம சேவையாளர் பிரிவுகளில் பௌதிக மூலதனம் மிக உயர்வான நிலையில் காணப்படுகின்றது. இதற்கு அடுத்த நிலையில் அதாவது பௌதிக மூலதனம் உயர்வான நிலையில் மாங்குளம், புதுக்


குடியிப்பு கிழக்கு, இராமநாதபுரம், மாவடியம்மன், வட்டக்கச்சி, மாயவனூர், அம்பாள்நகர், கனகாம்பிகைக்குளம், பாரதி புரம், பொன்னகர், ஆனந்தபுரம், உதயநகர் கிழக்கு, மலையாளபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் காணப்படு கின்றது. இதற்குக் காரணங்களாக இப் பிரதேசங்கள் யாவும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளாகக் காணப்படுவ தால் 79 வீதமான குடும்பங்கள் தற்போது நிரந்தரமான வீடுகளை அமைத்து அவை நிறைவடையும் நிலையில் உள்ளன.

அத்துடன் அவ்வீடுகள் அனைத்தும் மின்சார வசதிகளையும், நிரந்தர மலசல கூட வசதிகளையும் கொண்டு அமைக்கப் பட்டு வருகின்றன (கள ஆய்வு 2015, 2016). அதாவது கிராம அபிவிருத்தி என்பது இங்கு முனைப்புடன் செயற்படுவதால் பௌதிக மூலதனமும் உயர்வான நிலையில் காணப் படுகின்றது. இன்னும் பத்து வருடங்கள் கழித்த நிலையில் இவ் உயர்வான பௌதிக மூலதனத்தைக் கொண்டுள்ள பகுதிகளில் பெரும்பாலானவை மிக உயர்வான நிலையில் பௌதிக மூலதனத்தைக் கொண்ட பகுதிக ளாக மாறிவிடும். வெடிவைத்தகல்லு, ஆனந்த புளியங்குளம், ஊஞ்சால்க்கட்டி, மணவாளன் பட்டமுறிப்பு, கனகரத்தினபுரம், ஆனையிறவு, ஊரியான், தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு, பெரியகுளம், உமையாள்புரம், பெரிய இத்திமடு, புளியங்குளம், கருவேலன் கண்டல், பேராறு, பண்டாரவன்னி, கணேசபுரம், கூழா முறிப்பு, தண்டுவான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பௌதிக மூலதன மானது மிகக் குறைவான நிலையில் காணப் படுகின்றது (கள ஆய்வு 2015, 2016). இதற்குக் காரணம் இங்குள்ள வீடுகளில் 65 வீதமானவை தற்காலிக வீடுகளாக உள்ளன. அத்துடன், 74 வீதமான வீடுகளில் தற்காலிக மலசலகூடம் மட்டுமே காணப்படுகின்றது. மேலும், இங்கு மின்சாரம் பெறும் குடும்பங்கள் 27 வீதமாக உள்ளன. ஒரு குடும்பம் கூட சூரிய கலத்தினைப் பயன்படுத்தவில்லை (வினாக் கொத்து 2015, 2016). மேற்கூறப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் 63 வீதமாக உள்ளமை குறிப்பிடத் தக்க விடயமாகும் (கள ஆய்வு 2015, 2016) இதனால் அவர்களால் பௌதிக மூலதனத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை. ஆய்வுப் பிரதேசத்தில் இருபத்து நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் பௌதிக மூலதன மானது மத்திம நிலையில் காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இங்கு 57 வீதமான வீடுகள் நிரந்தரமான வீடுகளா கவும், 49 வீதமான குடும்பங்கள் மின்சாரத்தி னைப் பயன்படுத்துபவர்களாகவும், 34 வீத மான குடும்பங்கள் மின்சாரம் இல்லாத வேளையில் சூரியகலங்களைப் பயன்படுத் துபவர்களாகவும், இரண்டு பூங்காக்கள், மூன்று வாசிகசாலைகள் எனப் பொழுது போக்கு மையங்கள் உள்ளமை போன்ற காரணங்களால் இங்கு பௌதிக மூலதனம் மத்திம நிலையில் உள்ளமை ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது (கள ஆய்வு - 2015, 2016).

இவ்வாறாக, ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஐந்து மூலதனச் சொத்துக்களும் பல்வேறு கட்டளைக்கற்கள் மூலம் அளவீடு செய்யப் பட்டு, ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, பகுப் பாய்வு முடிவுகள் படங்களாகவும், பெறுபேறுக ளாகவும் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசத் தின் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு இவ்வொவ்வொரு மூலதனங்களின் தனித் தனிக் கட்டளைக்கற்களின் பங்களிப்பு மிக அவசியமாக உள்ளதை மேற்கூறப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியக் கூடியதாக உள்ளது.

**3.2. வாழ்வாதாரச் சொத்துக்களை மதிப்பிடல்**

மனித மூலதனம், இயற்கை மூலதனம், நிதி மூலதனம், சமூக மூலதனம், பௌதிக மூலதனம் ஆகிய ஐந்து வகையான வாழ் வாதாரச் சொத்துக்களையும் முறையியலில் கூறப்பட்டதுபோல நியமமாக்கல் பெறுமதி கொடுக்கப்பட்டு நிறையிட்டு அதன் மூலம் ஐந்து மூலதனங்களையும் ஒன்றாக இணைத்து வாழ்வாதாரச் சொத்துக்களின் பொதுமைப்படுத்திய இடம்சார் பரம்பற் பாங்குப் படம் (Livelihood Map) பெறப்பட் டுள்ளது. இதனை உரு 9 இல் அவதானிக்க முடியும்.




உரு 9 : வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பற் பாங்கு

ஐந்து மூலதனச்சொத்துக்களும் உயர்வான நிலையில் உள்ள பகுதிகளாகப் புதுக் குடியிருப்பு மேற்கு, மாங்குளம், கோம்பாவில் ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது, ஆய்வுப் பிரதேசத்தின் மொத்தப் பரப்பில் 2.88 வீதமாக காணப்படுகின்றது. போரிற்குப் பின்னர் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்ற நிலையில் இக்கிராம சேவகர் பிரிவுகளிலே மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை கள ஆய்வின் மூலமும் அறிய முடிகின்றது. இக்கிராம சேவையாளர் பிரிவுகளில் விவசாயக் குடும்பங்கள் அதிக மாக இருப்பதோடு அவர்கள் யாவரும் தமக் குரிய விவசாய நிலங்களில் இரண்டு போகங்களில் பயிர்ச்செய்கையை மேற் கொள்கின்றார்கள். அத்துடன், மேட்டு நிலப் பயிர்ச் செய்கையிலும் அதிகளவானோர் ஈடுபட்டுள்ளதை கள ஆய்வின் போது நேரடியாக அவதானிக்க முடிகின்றது. அத்து டன், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளுடன் ஒப்பிடும்போது இங்கு குறைவாக (8%) இருப்பதோடு அதிக ளவான பிள்ளைகள் (94%) பாடசாலைக்கு செல்வதையும் அவதானிக்க முடிந்தது (கள ஆய்வு 2016). இப்பிரதேசத்தில் 84 வீதமான குடும்பங்கள் நிரந்தரமான வீடுகளைக் கொண்டிருப்பதோடு ஏனையவர்களில் (மிகுதி 16%) அதிகளவானோர் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அத்துடன், இங்கு நூறு வீதமான குடும்பங்க ளும் மின்சார வசதிகளைக் கொண்டிருப்பதை நேரடி ஆய்வின் மூலம் அறிய முடிந்துள்ளது. இக்கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பெரும் பாலான குடும்பங்கள் (83%) மின்சாரம் இல்லாத வேளையில் சூரிய கலங்களைப் பயன்படுத்துகின்ற நிலையும் காணப்படு கின்றது. சுகாதாரம், பாதுகாப்பு போன்றன உயர்வாகவும், தமக்குத் திருப்தியளிப்ப தாகவும் இப்பிரதேச மக்களுடன் கலந்துரை யாடிய போது குறிப்பிட்டுள்ளார்கள். இங்கு உற்பத்தியாகும் விளைபொருட்களை உடனடியாக விற்பனைசெய்ய முடிவதால் மக்களின் வருமான நிலையும் உயர்வாகக் காணப்படுவதோடு, அடுத்த பருவ பயிர்ச் செய்கைக்கு அது வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளார்கள் (மையக் குழு கலந்துரையாடல் - 2017). இத்த கைய காரணிகளால் ஆய்வுப் பிரதேசத்தின் வாழ்வாதாரம் உயர்வான நிலையில் காணப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தின் இருபத்தொன்பது கிராம சேவகர் பிரிவுகள் மத்திம நிலையில் வாழ்வாதாரச் சொத்துக்களைக் கொண்ட பகுதிகளாக ஆய்வின் மூலம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இது ஆய்வுப் பிரதேசத் தின் மொத்தப் பரப்பின் 27.88 வீதமாகக் காணப்படுகின்றது. இங்கு எல்லா வகையான வாழ்வாதாரச் சொத்துக்களும் ஏறக்குறைய சமமான நிலையில் காணப்படுவதோடு, இப்பிரதேசத்தில் ஐம்பது வீதமான மக்கள் அரச தொழில் புரிபவர்களாகவும், கூலித் தொழில் புரிபவர்கள் குறைவான நிலையில் (மூன்று வீதம்) காணப்படுகின்றனர். அரச ஊழியர்களாக இருந்தபோதும் ஓய்வு நேரங்களில் வருமானத்தைப் பெறக்கூடிய சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற தன்மையை அதிகளவான குடும்பங்களில் நேரடிக்கள ஆய்வின்போது கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆய்வுப் பிரதேசத்தில் அறுபத்தைந்து கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்கள் குறைவான நிலையில் உள்ளமை பகுப்பாய்வுகளின் மூலம் கண்டறி யப்பட்டுள்ளது. இது ஆய்வுப் பிரதேசத்தின் மொத்தப் பரப்பில் 62.51 வீதமாகவுள்ளது.

இப்பிரதேசங்களில் அதிகளவான காடுகள் இருப்பதும் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்ற நிலங்கள் காணப்படுவதும் கூலித்தொழிலாளர்கள் அதிகமாகக் காணப் படுவதும், பெண் தலைமைத்துவ குடும் பங்கள் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது அதிகமாக இருப்பதும் வாழ்வாதாரச் சொத்துக்கள் குறைவான நிலையில் இருப்ப தற்குக் காரணங்களாகும்.

மிகவும் குறைவான நிலையில் வாழ் வாதாரச் சொத்துக்களைக் கொண்ட பகுதிக ளாக ஏழு கிராமசேவையாளர் பிரிவுகள் ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட் டுள்ளன. இது ஆய்வுப் பிரதேசத்தில் 6.73 வீதமாக உள்ளது. இங்குள்ள மூலதனச் சொத்துக்களை இக் கிராமசேவகர் பிரிவுக ளில் வசிக்கும் மக்கள் முழுமையாகச் சரியான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத் தாமையே இதற்கு முக்கிய காரணமாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் மனித மூலதனமும், இயற்கை மூலதனமும் உயர்வான நிலை யில் காணப்பட்ட போதும், அவற்றை முறை யாக நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்கு நிதி மூலதனம் பற்றாக்குறையாக உள்ளமை யால், அதனோடு இணைந்து சமூக மூலதன மும், பௌதிக மூலதனமும் குறைவான நிலையைக் கொண்டுள்ளதை ஆய்வின் போது கண்டறிய முடிந்தது. அத்துடன் குடும்ப வறுமை காரணமாக இங்குள்ள குடும்பங்களில் 14 வீதமான குடும்பங்களில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகியுள்ளார்கள் (கள ஆய்வு - 2016). இக் கிராம சேவையாளர் பிரிவுகளில் 81 வீதமானவர்கள் சமுர்த்தி நிவாரண உதவி பெறுபவர்களாக உள்ளார்கள் (கள ஆய்வு - 2016). இதனால் இங்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான காரணங்க ளால் மேற்கூறப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்கள் மிகக் குறைவான நிலையில் உள்ளதை ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்துள்ளது.

ஆய்வுப் பிரதேச வாழ்வாதாரச் சொத்துக் களின் பரம்பற் பாங்கினை ஆய்வுப் பிரதேச வறுமைப் பரம்பல் நிலைகளோடு ஒப்பிட்டு அவதானிக்கின்றபோது வறுமை உயர்வா கக் காணப்படுகின்ற பிரதேசங்களில் வாழ் வாதாரச் சொத்துக்களின் பரம்பல் மிகக் குறைவான நிலையிலேயே காணப்படு கின்றது. மாறாக, வறுமை குறைவாகக் காணப்படுகின்ற பிரதேசங்களில் வாழ் வாதாரச் சொத்துக்களின் பரம்பல் உயர் வான நிலையிலும் காணப்படுகின்றது. இந்த வகையில் உண்மையான வறுமைக்கும், வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பல்களுக் கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப் படுகின்றது.

## 4. முடிவுரை

இவ்வாறாக ஆய்வுப் பிரதேசத்திலுள்ள நூற்றுநான்கு கிராம சேவகர் பிரிவிலும் வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பற்பாங்கு எவ்வாறு உள்ளது என்பதை அறிய முடிந்துள்ளது. மேற்கூறப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக் களின் பரம்பல் மட்டங்கள் ஒரே மாதிரியாகக் காணப்படவில்லை. வாழ்வாதாரச் சொத்துக் களின் பரம்பலில் காணப்பட்ட வேறுபாடு களே வறுமை மட்டங்களிலும் வேறுபாடுகள் காணப்பட காரணமாகும். பகுப்பாய்வுக ளின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி ஒவ்வொரு மூலதனமும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளில் வேறுபட்ட அளவில் காணப்படுகின்றன. அந்த வகையில் மனித

மூலதனமானது புதுக்குடியிருப்பு மேற்கு, மாங்குளம், கோம்பாவில், உடையார்கட்டு தெற்கு, அம்பாள்நகர், உருத்திரபுரம் வடக்கு, இராமநாதபுரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் இயற்கை மூலதனமானது கண்டாவளை, புளியம் பொக்கணை, மன்ன குளம், புளியங்குளம் வடக்கு, வெடிவைத்த கல்லு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளி லும் சமூக மூலமனமானது புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, கோம்பா வில், தேவிபுரம், முள்ளியவளை மேற்கு, அம்பாள்நகர், வட்டக்கச்சி, மாங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், பௌதிக மூலதனமானது மாங்குளம், புதுக்குடியிருப்பு கிழக்கு, இராமநாதபுரம், மாவடியம்மன், வட்டக்கச்சி, மாயவனூர், அம்பாள்நகர், கனகாம்பிகைகுளம், பாரதி புரம், பொன்னகர், ஆனந்தபுரம், உதயநகர் கிழக்கு, மலையாளபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், நிதிமூலதன மானது அம்பாள்நகர், மாயவனூர், தேவிபுரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு கிழக்கு, முள்ளியவளை மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உயர்வான நிலையில் காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் பகுப்பாய்வுப் பகுதியில் கூறப்பட்டுள்ளன (உரு 4 தொடக்கம் உரு 8 வரை அவதானிக்க).

அதேவேளை, மனித மூலதனமானது ஆனையிறவு, ஊரியான், தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், பெரியகுளம், கணேச புரம், பேராறு, ஆனந்தபுளியங்குளம், பன்றி கெய்தகுளம், புளியங்குளம் தெற்கு, ஊஞ்சால் கட்டி, வெடிவைத்தகல்லு, சேமமடு, மலிகை, மகிழங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், பௌதிக மூலதனமானது வெடிவைத்தகல்லு, ஆனந்தபுளியங்குளம், ஊஞ்சால்க்கட்டி, மணவாளன்பட்டமுறிப்பு, கனகரத்தினபுரம், ஆனையிறவு, ஊரியான், தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு, பெரிய குளம், உமையாளபுரம், பெரிய இத்திமடு, கூழாமுறிப்பு, தண்டுவான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், இயற்கை மூலதனமானது மணவாளன்பட்டமுறிப்பு, பனிக்கன்குளம், கருவேலன்கண்டல் உட்பட முப்பத்தொரு கிராமசேவையாளர் பிரிவுகளி லும், நிதி மூலதனமானது ஆனையிறவு, ஊரியான், தட்டுவன்கொட்டி உட்பட பதினெட்டு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் மிகக் குறைவான நிலையில் காணப்படு கின்றன. அதேவேளை, சமூக மூலதனமானது ஊரியான், தட்டுவன் கொட்டி, புளியம் பொக்கணை, தச்சடம்பன், மணவாளன் பட்ட முறிப்பு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகள் உட்பட முப்பத்து நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் குறைவான நிலையில் உள்ளமை யும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான காரணங்கள் பகுப்பாய்வுப் பகுதியில் கூறப்பட்டுள்ளன. (உரு 4 தொடக்கம் உரு 8 வரை அவதானிக்குக)

வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பற்பாங்கினை அறிந்ததன் மூலம் ஆய்வுப் பிரதேச வறுமை நிலையையும் அறிய முடிந்துள்ளது. இங்கு மனிதவளமும், இயற்கைவளமும் அதிகமாகக் காணப்படு கின்றன. அவற்றினைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும். இப் பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளைப் பூரணமாக இயங்க வைப்பதன் மூலம் அதிகளவானோர்க்கு வேலை வாய்ப்பினை வழங்க முடியும். உதாரணமாக, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையைக் குறிப்பிடலாம். அதேபோல் ஆனையிறவிலும் உப்பளத் தொழிலை மேம்படுத்தலாம். இதனால் இங்கு நிலவுகின்ற வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவதோடு

வறுமையும் குறைக்கப்படும். அத்துடன் பல பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சுய தொழில்களில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தாலும் அதனை முழுமையாக மேற்கொள்வதற்கு நிதிப் பற்றாக்குறையினை எதிர்நோக்குகின்றன. இவர்களுக்கு நிதிவசதி களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அத் தொழில்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வழி செய்யலாம். குறிப்பாகச் சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கக் கடனுதவிக ளைக் குறைந்த வட்டி வீதத்தில் அறிமுகப்படுத் தலாம். அத்துடன், உள்ளூர் உற்பத்தி பொருட்க ளுக்கான சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வெளியூர் உற்பத்திகளை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்துவதன் மூலமும், விவசாயத்தில் நவீன தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் இப்பிரதேச மக்களின் வறுமையைக் குறைத்து நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியும். அத்துடன் கடனுதவிக ளைப் பெறுவது தொடர்பான சரியான விளக்கங்களை கடன் வழங்கும் நிறுவனங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பெரும்பாலான மக்களுக்கு தாம் பெற்றுக் கொள்ளும் கடனுதவிகள் பற்றிய சரியான விளக்கங்கள் இன்மையாலேயே நிரந்தர மான கடனாளிகளாக மாறி வறுமையில் மூழ்கியுள்ளார்கள். அதாவது கடனுதவிகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய தேவை கடனை வழங்கும் நிதிநிறுவனங்களின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் காணப்பட வேண்டும். எனவே, கிராம சேவகர் பிரிவு ரீதியாகக் காணப்படுகின்ற வாழ்வாதாரச் சொத்துக்களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதுடன், அவற்றின் பரம்பலை சமப்படுத்துவதன் மூலம் வறுமையினைக் குறைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த முடியும். இதனால், ஆய்வுப் பிரதேசத்தில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை எட்ட முடியும். எனவே வாழ்வாதாரச் சொத்துக் களின் இடம்சார் பரம்பலைச் சரியாக அறிவ தன் மூலம் ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி யைச் சரியாக மேற்கொள்ளலாம்.

## உசாத்துணைகள்


Elvide.C.D. et al. (2009). 'A Global poverty map derived from satellite data.' *ELSEVIER-Science Direct Computers and Geosciences.* Vol. 35: 1652-1660.

Erenstein,O., Hellin, J. & Chandna, P. (2010), 'Poverty mapping based on livelihood assets: A meso-level application in the Indo- Gangetic Plains, India'. *ELSEVIER-Science Direct Applied Geography,* Vol.30: 112-125.

Frank Ellis & Godrey Bahiigwa. (2002), 'Livelihoods and Rural Poverty Reduction in Uganda', *ELSEVIER-Science Direct World Development.* Vol.31 (6) : 997-1013.

JC Gailard, Emmanuel A. Maceda, Elodie Stasiak, Iwan Le Beree & Maria Victoria O.Espaldon. (2009), 'Sustainable livelihoods and people's Vulnerability in the face of coastal hazards'. *Springer science + Business media. B.V*: 119-129.

Kristjanson, P., Radeny, M., Baltenweck, I., Ogutu, J. & Notenbaert, A. (2005), Livelihood mapping and poverty correlates at a meso-level in Kenya.

*Food Policy.* International Livestock Research Institute (ILRI), 30: 568-583.

Marcelo Bisogno, Alberto Chong. (2002), 'Poverty and Inquality in Bosnia and Herzegovina after the Civil War', *ELSEVIER-Science Direct World Development.* Vol.30 (1): 61 – 75.

Nicholas Minot. (2000). 'Generating Disaggregated poverty Maps: An Application to Vietnam' *ELSEVIER-Science Direct World Development.* Vol. 28 (2): 319 – 331.

Raymond, C.M.Bryan, B.A., MacDonald, D.H., Cast, A. Strathearn, S., Grandgirard, A. & Kalivas, T. (2009), 'Mapping Community values for natural capital and ecosystem services'. *Ecological Economics,* Vol. 68: 1301-1315.

Sivakumar. S. S. (2020). 'Northern River Basins Yield study for Operational Policy of Irrigation Schemes and Water Resources and Agriculture Development Strategy for North-2020-2035', Support for Publication – *WaSo Project,* University of Jaffna.

இலங்கைத் தேசப்படத் தொகுதி, (2013), நில அளவைத் திணைக்களம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட, பிரதேச செயலகப் புள்ளிவிபரக் கைநூல்கள் 2015, 2016, 2017.